**தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டம் - 2015**

தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3027-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் iv ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தென்பகுதி நெடுஞ்சாலைகள் இணைப்பு வீதிகளின் 32 கிலோமீற்றர்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,893 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,670 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம்

மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

செயற்திட்டத்தின் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது ஏனைய இரு நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை நிர்வகித்திருந்ததுடன், மூன்று செயற்திட்டங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 3.64 மில்லியன் தொகையான மேந்தலைச் செலவினங்கள் அத்தகைய செலவினங்களை பகுதியளவில் உறிஞ்சுவதற்கு பொருத்தமான அடிப்படையை கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 75 * | 9,670 | 644.00 | 2.59 | 419.41 | 3.38 | 523.04 |
| இலங்கை அரசாங்கம் | 25 | 3,223 | 466.86 | 3.29 | 466.78 | 3.30 | 468.06 |
| | **100** | **12,893** | **1,110.86** | **5.88** | **886.19** | **6.68** | **991.10** |

* மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடன் இலக்கம் 3028 எஸ்ஆர்ஐ இன் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஒதுக்கீடு மாற்றப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மொறட்டுவ – பிலியந்தலை வீதி மற்றும் இரத்மலானை – மிரிஹான வீதியின் 4.64 கிலோமீற்றர்கள் புனரமைப்பு வேலைகளில் 55 சதவீதமான புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 41 சதவீதமான புனரமைப்பு வேலைகளே அத்திகதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், மொறட்டுவ – பிலியந்தல வீதியினூடாக மின்சார இணைப்புக்களை பொருத்துவதற்கு இலங்கை மின்சார சபைக்கு ரூபா 15.77 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தகைய வேலைகள் 2016 ஏப்ரல் 30 இலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிருலப்பன-கொடஹம வீதி மற்றும் கெஸ்பேவ – பொகுன்விட்ட வீதிகளின் 16.18 கிலோமீற்றர்கள் நீளமான புனரமைப்பு வேலைகள் மற்றும் தெற்கு அதிவேகப்பாதையிலிருந்து மாதுருகொட வரையிலான 10.37 கிலோமீற்றர்கள் நீளமான வீதி 2016 யூன் 30 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 வரை செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்களிலுள்ள தாமதத்தால் ரூபா 16.16 மில்லியன் தொகையான கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்கள் செயற்திட்டத்தால் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த நிர்வாக தேவைப்பாடுகளின் பிரகாரம், ஒப்பந்தக்காரரால் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து 60 நாட்களுக்குள் தர உறுதிப்பாட்டு நோக்கத்திற்காக ஆய்வுகூடங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், 2015 நவம்பர் 16 ஆந் திகதி கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சீப்பில் மொறட்டுவ – பிலியந்தலை வீதியின் புனரமைப்பு வேலைகளுக்காக ஒப்பந்தக்காரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூடம் தேவையான பரீட்சிப்பு உபகரணங்களுடன் பொருத்தப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரரால் பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் வெப்பமானி மற்றும் மார்சல் மணி போன்றவற்றிற்காக தேவையான நேர அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 4.9 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஐஎஸ்ஓ 9000:2000 நியமத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு தர உறுதிப்பாட்டு முறைமையின் வன் பிரதிகள் ஒப்பந்தம் ஆரம்பித்து 28 நாட்களுக்குள் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தர உறுதிப்பாட்டு திட்டத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கோரிக்கை நிபுணர்கள் மற்றும் ஆலோசனை பதவியணியினரின் பிரதம நில அளவையாளரின் முக்கிய பதவிகள் 2015 ஆகஸ்ட் 31 வரை வெற்றிடமாக இருந்ததுடன் வீதி புனரமைப்பு வேலைகளின் மேற்பார்வை நடவடிக்கைகள் முறையாக

நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பதை இது சுட்டிக்காட்டியது. ஒப்பந்த உடன்படிக்கையின் 4.4 (III) ஆம் இலக்க உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவாத முறிகள் மற்றும் காப்புறுதி கோரிக்கைகளை கோரிக்கை நிபுணர்கள் மீளாய்வு செய்யப்பட் வேண்டும். எனினும், வீதி புனரமைப்பு வேலைகளிற்கான காப்புறுதி பாதுகாப்பு மற்றும் பிணை முறிகள் போன்றவற்றிற்காக ஒப்பந்தக்காரருக்கு 2015 திசெம்பர் 31 வரை ரூபா 12.55 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் 4.4 (III) ஆம் இலக்க உட்பிரிவில் வேண்டப்பட்டவாறு நில அளவையாளரால் சிபாரிசு செய்யப்படாமல் 04 இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள் மீது ரூபா 89.28 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 நிதிக்கட்டுப்பாடுகள் இணங்கியிருக்காமை**

ஓப்பந்த நிபந்தனையின் 6.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம், புனரமைப்பு வேலைகளில் ஆகக்குறைந்தது 20 சதவீத பெண்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்துவதற்காக பால் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டுமென ஒப்பந்தக்காரர்கள் வேண்டப்பட்டிருந்தனர். செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு புனரமைப்பு வேலைகளுக்கான பெண்களின் பங்குபற்றுதலானது 6.5 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.